**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**O.S.No.75/2021**

Deposition of witness **DW1** for Defendant and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Karthick | Father's Name | : Ramakrishnan |
| Age | : | Village | : |

**நாள்:24.02.2026.**

**பி.வா.சா.1.முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. பி.வா.சா.1. ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வாதி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

வாதி நவராஜின் பள்ளியில் தான் நான் படித்தேன் என்றால் சரிதான். வாதியை எனக்கு 30 - 35 வருடமாக தெரியும் என்றால் சரிதான். நான் ஓசூரில் எனது உறவினர் மாமா நகை கடையில் கூட்டாக இருந்தேன் என்றால் இல்லை. அங்கு வேலைக்கு இருந்தேன். அது எந்த வருடம் என்றால் 2014 ஆகும். நான் அங்கு 2009 ல் இருந்து 2014 வரை இருந்தேன். அந்த நகை கடை கொஞ்சும் நஷ்டம் அடைந்ததால் அந்த கடையை அபிவிருத்தி செய்வதற்கு கடன் வாங்குவதற்கு பார்த்துக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்து என் அப்பா எனக்கு தானமாக கொடுத்த சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து 6 அடி அகலம் 10 ½ அடி நீளம் என்றால் சரிதான். நான் எனது மாமா கடையில் இருந்த காலகட்டமான 2009-2014 ல் தாவா சொத்து சும்மா பூட்டி தான் இருந்தது என்றால் இல்லை . என் அப்பா இருந்தார். அப்போது என் தகப்பனாருக்கு 65 வயது இருக்கும். என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் 2018 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.1 ல் உள்ள சாட்சிகள் எனக்கு ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ.1 ஐ

டைப் செய்தது சத்யா ஆகும். வா.த.சா.ஆ.1க்கு பத்திர எழுத்தர் மாதையன் ஆகும். வா.த.சா.ஆ.1க்கு விவரங்கள் தானபத்திரத்தை பார்த்து நான் தான் சொன்னேன் என்றால் இல்லை. தானபத்திரத்தை பார்த்து அவர்களாகவே எழுதி கொண்டார்கள். தானபத்திரத்தை நான் பத்திர எழுத்தரிடம் காட்டினேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ஐ நான் படித்து பார்த்து தான் கையெழுத் செய்தேன் என்றால் சரி. வா.த.சா.ஆ.1 இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ல் அதில் உள்ளகடைக்கு ரூ.2,50,000 தொகை பேசப்பட்டு ரூ.2,00,000 கொடுத்தாகவும் பாக்கி ரூ.50000 என்று அ தில் போடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.1 ல் போடப்பட்டுள்ள காலகெடு 5 மாதத்திற்கு பிறகு நான் வாதிக்கு கிரய பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் மாரிமுத்து எனது வீடு மற்றும் கடைக்கு வந்து என்னிடம் கேட்டிருக்கிறார்களா என்றால் கேட்டார்கள். ரூ.2,00,000 திருப்பி கொடுத்துவிட்டேன். அவர்கள் என்னிடம் கிரயம் எழுதி கொடுக்கச்சொல்லி கேட்டார்களா என்றால் இல்லை. வாதி என்னிடம் பலமுறை வந்து கேட்டிருக்கிறார் என்றால் ஆமாம். நான் கிரயம் செய்து கொடுக்காததாதல் தான் வாதி எனக்கு 19.09.2016 ல் அறிவிப்பு கொடுத்தார் என்றால். நான் அறிவிப்பு வந்த உடன் நான் ரூ.2,00,000 கொடுத்துவிட்டேன். அதற்கு முன்பு மாதம் மாதம் வட்டி கொடுத்துவந்தேன். வட்டி எப்போதில் இருந்து கொடுத்து வந்தேன் என்றால் அக்ரி மென்ட் பதிவு செய்யப்பட்டதில் இருந்து கொடுத்து வந்தேன். வட்டியை நான் கையில் தான் கொடுத்தேன். ஒவ்வொருமாதமும் வட்டி கொடுத்தற்கான தேதி ஞபாகம் இல்லை. தேதியை நான் எதுவும் எழுதி வைத்துக்கொள்ளவில்லை. நான் வாதியிடம் வட்டி மற்றும் ரூ.2,00,000 கொடுக்கும் போது எதுவும் எழுதி வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. அவர் அப்பரமாக எழுதி தருவதாக சொன்னார். மாதம் மாதம் வட்டி மற்றும் ரூ.2,00,000

கொடுத்ததை நான் எனது எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. நோட்டிஸ் வந்த பிறகு தான் என் அப்பா 2018 ஜனவரி மாதத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.வாதி என்னிடம் கிரயம் எழுதி கொடுக்கச்சொல்லி கேட்டதற்கு என் அப்பா இறந்ததால் நான் தான் காலதாமதம் செய்துவந்தேன் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த அறிவிப்புக்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பதில் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். நான் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்யவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டிலும் வாதி கடைசியாக என்னிடம் கிரயம் எழுதி கொடுக்கச்சொல்லி கேட்டரா என்றால் இல்லை. அவ்வாறு கேட்டும் நான் பதிவு செய்து கொடுக்காததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ரூ.2,00,000 பணம் கொடுத்த பிறகு அக்ரிமென்டை இரத்து செய்து கொடுக்க அறிவிப்போ, வழக்கோ தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக நான் வாதியிடம் நான் எதுவும் பஞ்சாயத்து வைத்தேனா என்றால் இல்லை. ஆனால் வாதியிடம் கேட்டேன். வா.த.சா.ஆ.1 கிரயத்திற்காக தான் போடப்பட்டது என்றும் கடனுக்காக பேடப்படவில்லை என்றும் அதனால் நான் வாதியிடம் பாக்கி கிரய தொகையை பெற்றுக்கொண்டு கிரய பத்திரம் எழுதி கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ரூ.50,000, ரூ.1,00,000 வைத்திருப்பதற்கு தகுதி இருக்கிறது என்றால் சரிதான். தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.